Find us on facebook/tamilmirror  Follow us on tamilmirror  epaper/tamilmirror.lk

www.tamilmirror.lk

தமிழ் Mirror

TUESDAY, JANUARY 23, 2024

செவ்வாய்க்கிழமை ஜனவரி 23, 2024 | ஒளி: 10 கதிர் 177 | பக்கம்:06 | நகரப்பதிப்பு | FREE

# விலைகள் குறைந்தன



கடந்த வாரத்துடன் ஒப்பிடுகையில், தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் பல மரக்கறிகளின் மொத்த விலைகள் பாரியளவில் குறைவடைந்துள்ளதாகப் பொருளாதார நிலைய வர்த்தகர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

அதன்படி, காய்கறிகளின் விலை கணிசமாகக் குறைந்தாலும் அவற்றை வாங்குவதற்கு வியாபாரிகள் பற்றாக்குறையாகவே இருப்பதாகப் பொருளாதார மைய வர்த்தக சங்கம் கூறுகிறது.

காய்கறிகள் கொள்முதல் குறைந்துள்ளதால் வேகமாக உயர்ந்து வந்த அனைத்து காய்கறிகளின் விலையும் குறைந்துள்ளது.

பாராளுமன்றத்தில் பாலியல் துன்புறுத்தல்கள்

# அவை பொய்யாம்

**குஷானி ரோஹணதீர தெரிவிப்பு; நற்பெயருக்கு சேதம் விளைவிக்கும் செயல் என்கிறார்**



**விசாரணை அறிக்கை தற்போது தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.**

பாராளுமன்றத்தில் பெண் ஊழியர்களுக்கும் ஒரு சில பெண் உறுப்பினர்களுக்கும் தொடர்ந்து பாலியல் துன்புறுத்தல்கள் இடம்பெற்று வருவதாகவும், அது தொடர்பில் உரிய விசாரணைகள் மற்றும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதில்லை என்றும் வெளியாகும் தகவல்கள் முற்றிலும் பொய்யானவை என பாராளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

நிகழ்நிலை காப்புச் சட்ட மூலத்துக்கு


## கிழக்கில் கடும் எதிர்ப்பு




வா.கிருஸ்ணா

நிகழ்நிலை காப்புச் சட்ட மூலம், பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலம் ஆகியனவற்றுக்கு எதிர்ப்புத் தெரிவித்து மட்டக்களப்பில் எதிர்ப்புப் பேரணியும் ஆர்ப்பாட்டமும் திங்கட்கிழமை (22) நடைபெற்றன. அத்துடன் அடையாள உண்ணாவிரதமும் நடைபெற்றது. கிழக்கு சிவில் சமூகப் பிரதிநிதிகளின் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்தப் பேரணியில் கிழக்கின் பல பகுதிகளையும் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் கலந்து கொண்டனர்.

தொடர்ச்சி P2



## அயோத்தி ராமர் கோவில் பிரதிஷ்டை



அயோத்தி ராமர் கோவிலில் நடைபெற்ற பிராண பிரதிஷ்டை நிறைவடைந்தது.

அயோத்தி ராமர் கோயில் திறப்பு விழா, கோலாகலமாக திங்கட்கிழமை (22) நடைபெற்றது. விழாவை முன்னிட்டு அயோத்தி ராமர் கோயில் பல்வேறு விதமான மலர்களால் அலங்கரிக்கப்பட்டு வண்ணமயமாகக் காட்சி அளித்தது.

வண்ண வண்ண மலர்களாலும், கண்களைப் பறிக்கும் விலை உயர்ந்த நகைகளாலும் குழந்தை ராமர் அலங்கரிக்கப்பட்டு காட்சி தந்தார். இதனைத் தொடர்ந்து பிராண பிரதிஷ்டை விழா தொடங்கியது.

இதனையடுத்து, பகவான் ராமருக்கு ஆரத்தி காண்பிக்கப்பட்டது. பிரதமர் நரேந்திர மோடி, ராமருக்கு ஆரத்தி காண்பித்தார். இதையடுத்து, பிரதமர் நரேந்திர மோடி, உட்பட பலர் குழந்தை ராமரைத் தரிசித்து நீண்ட நேரம் பிரார்த்தனையில் ஈடுபட்டனர்.



## பிருந்தாவன கிருஷ்ணர் ஆலயத்தில் வழிபாடு

வ.சக்திவேல்

அயோத்தியில் ஸ்ரீ ராமர் கோவில் திறப்பு விழா நடைபெற்ற நிலையில், மட்டக்களப்பு தேத்தாதீவில் அமைந்துள்ள பிரசித்தி பெற்ற ஸ்ரீ ஆண்டாள் பிருந்தாவன கிருஷ்ணர் ஆலயத்தில் திங்கட்கிழமை (22) சிறப்பு விசேட பூஜை வழிபாடுகள் இடம்பெற்றன.

இதன்போது மூல மூர்த்திக்கும், ஏனைய பரிவார தெய்வங்களுக்கும் சிறப்புப் பூஜைகள் மேற்கொள்ளப்பட்டு வழிபாடுகள் இடம்பெற்று, ஸ்ரீ ராம தீபங்களும் பக்தர்கள் ஏற்றப்பட்டன. ஆலய பிரதம குரு ராமானுஜன் செல்வப்பிராகாஷ் பூஜை வழிபாடுகளை மேற்கொண்டார்.

இதன்போது அப்பகுதியிலுள்ள கிருஷ்ண பக்தர்கள் கலந்து கொண்டு ராமகானம் பாடி பனை வழிபாடுகளிலும் ஈடுபட்டிருந்தனர்.

## சீத்தாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்தில் விசேட பூஜை

டி.ஷங்கீதன்

அயோத்தியில் இராமர் ஆலய கும்பாபிஷேகம் திங்கட்கிழமை (22) நடைபெற்றது. அதனை முன்னிட்டு, நுவரெலியா - சீத்தாஎலிய ஸ்ரீ சீதையம்மன் ஆலயத்தில் விசேட பூஜைகள் நடைபெற்றன.

நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் நுவரெலியா ஆவேலியா ஸ்ரீ முத்துமாரியம்மன் சீத்தாஎலிய சீதையம்மன் ஆலயத்தின் அறங்காவலர் சபை தலைவருமான வேலுசாமி இராதாகிருஸ்ணன் தலைமையில் நடைபெற்றது. இதில், விசேட அதிதியாக கண்டி இந்திய உதவி தூதரகத்தின் உதவித் தூதுவர் டாக்டர் ஆதிரா எஸ். கலந்து கொண்டார்.



உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலம்

## எதிராக ஐ.ம.ச மனுத்தாக்கல்



அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள உத்தேச பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி, உயர் நீதிமன்றத்தில் திங்கட்கிழமை (22) மனுத்தாக்கல் செய்தது.

தொடர்ச்சி P2

## மைத்திரியின் மகள் வீட்டில் கொள்ளை

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகள் வீடு உடைக்கப்பட்டு, 30 இலட்சம் ரூபாய் பெறுமதியான சொத்துக்கள் திருடப்பட்டுள்ளன என தலங்கம பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## சா/த விண்ணப்பத்தில் கடும் கட்டுப்பாடு

கல்விப் பொதுத் தராதர சாதாரண பரீட்சைக்கான (2023-2024) விண்ணப்பங்கள் பரீட்சை திணைக்களத்தால் கோரப்பட்டுள்ளன. ஜனவரி 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முதல் பெப்ரவரி 15 நள்ளிரவு வரை மட்டும் இணையத்தின் ஊடாக மட்டுமே விண்ணப்பிக்க முடியுமெனப் பரீட்சைகள் திணைக்களத்தின் ஆணையாளர் அமித் ஜயசுந்தர அறிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

நிகழ்நிலை காப்புச் சட்ட வரைபு

## இரு நாள் விவாதம்

பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருக்கும் நிகழ்நிலை காப்புச் சட்டமூலம் மீதான விவாதம், பாராளுமன்றத்தில் செவ்வாய்க்கிழமை (23), புதன்கிழமை (24) நடைபெறவுள்ளது. விவாதத்துக்குப் பின்னர், அந்த சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்ள அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது.

தொடர்ச்சி P2




வழக்குக்கு வந்தோர் மீது துப்பாக்கிச் சூடு

## ஐவர் பலி

**அரசியல் கட்சியின் முக்கியஸ்தரும் அடங்குகிறார்**

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில், பெலியத்தவில் வெளியேறும் வாயிலுக்கு முன்பாக, திங்கட்கிழமை (22) காலை 8 மணியளவில் இனந்தெரியாதோரால் மேற்கொள்ளப்பட்ட சரமாரியான துப்பாக்கிப் பிரயோகத்தில், ஐவர் துடிதுடித்து மரணமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

'எங்கள் மக்கள் கட்சியின்' செயலாளர் கல்கமுவ ரத்கல் கொடவத்தே சமன் பிரசன்ன பெரேரா என்பர் உட்பட ஐவரே, இந்த துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி மரணித்துள்ளனர்.

தொடர்ச்சி P2

## சுகாதாரத் துறையின் பணிகளுக்கு AI தேவை



இலங்கை சுகாதாரத் துறையின் பணிகளுக்கு செயற்கை நுண்ணறிவை (Artificial intelligence - AI) பயன்படுத்த வேண்டிய தேவை எழுந்துள்ளதாக கொழும்பு பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் இந்திக கருணாதிலக்க தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## "இந்திய மீனவர்களின் படகுகளை பறிமுதல் செய்து கைது செய்க"

**வலியுறுத்தினார் ஆலம்: பயமா? மனிதாபிமானமா? எனவும் கேட்கிறார்**

வெளிவிவகார அமைச்சின் அழுத்தத்தினாலே கடற்றொழில் அமைச்சர், இந்திய மீனவர்களை விடுவிக்க இணங்கியிருக்கலாம் என சந்தேகம் எழுவதாகவும், இந்திய மீனவர்களை விடுவித்தமைக்கு வடக்கு மீனவர்களாகிய நாங்கள் எதிர்ப்பை தெரிவிப்பதாக வட மாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் செயலாளரும் ஊடக பேச்சாளருமான என்.எம்.ஆலம் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## குளிசைகளை விழுங்கிய பேராசிரியர் மரணம்

ஷேன் செனவிரத்ன

குளிசைகளை அதிகளவு உட்கொண்டார் என்ற சந்தேகத்தின் பேரில் பேராதனை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பேராதனை பல்கலைக்கழகத்தின் விவசாய பீடத்தின் பேராசிரியர் எல்.பீரிஸ் (வயது 60) உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தொடர்ச்சி P2

## வல்லிபுர ஆழ்வார் ஆலயத்தில் பூஜை

எஸ்.தில்லைநாதன்

அயோத்தியில் ஸ்ரீ ராமர் கோவில் திறப்பு விழா நடைபெற்ற நிலையில், பெறும் நிலையில் யாழ்ப்பாணம் வடமராட்சி வல்லிபர ஆழ்வார் ஆலயத்திலும் சிறப்புப் பூஜை வழிபாடுகள், திங்கட்கிழமை (22) இடம்பெற்றன.

சுதர்சன ஈஸ்வரக் குருக்கள், கணபதீஸ்வரக் குருக்கள் தலைமையில் சிவாச்சாரியர்கள் இணைந்து காலை 10 மணியளவில் ஸ்நபனம் அபிஷேகம் நடாத்தப்பட்டு பின்னர் இராமருக்கான விசேட அபிஷேக பூசைகள் இடம்பெற்றன. இதில் யாழ்ப்பாணத்திலுள்ள இந்தியத் துணை தூதரக அதிகாரிகள் பங்கேற்றிருந்தனர்.





PAGE 1 தொடர்ச்சிகள்

# அவை பொய்யாம்

பாராளுமன்றத்தில் ஒழுக்க மீறல் சம்பவங்களின் போது, அது தொடர்பான விசாரணைகள் சபாநாயகரின் வழிகாட்டுதலின் கீழ் மிகவும் பக்கச்சார்பற்ற முறையில் மேற்கொள்ளப்படுவதாகவும், விரைவான விசாரணைகளுக்கு சபாநாயகர் தனது அதிகபட்ச பங்களிப்பை வழங்குவதாகவும், எந்த விதத்திலும் அதில் தலையிடுவதோ அல்லது செல்வாக்குச் செலுத்துவதோ இல்லை எனவும் குஷானி ரோஹணதீர வலியுறுத்தினார்.

இதற்கு முன்னர் ஒரு சில பெண் ஊழியர்களுக்கு பாலியல் துன்புறுத்தல் மேற்கொள்ளப்பட்ட சம்பவமொன்று பதிவாகியிருந்தாலும், அது தொடர்பாக நியமிக்கப்பட்ட உள்ளகக் குழு மிகவும் பக்கச்சார்பற்ற விசாரணை நடத்தி அந்த விசாரணை அறிக்கை தற்போது தன்னிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

அத்துடன், இதில் தொடர்புடையதாகச் சந்தேகிக்கப்படும் பிரதான அதிகாரி பணியிலிருந்து இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும், அதற்கமைய, அது தொடர்பான எதிர்கால நடவடிக்கைகள் உடனடியாக எடுக்கப்படவுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார். மேலும், இது தொடர்பில் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு சட்டத்தை அமுல்படுத்துவதற்காக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகவும் செயலாளர் நாயகம் தெரிவித்தார்.

இந்தத் துன்புறுத்தல் தொடர்பாக எதிர்க்கட்சித் தலைவருக்குக் கடிதம் மூலம் அறிவித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்று வெளியாகும் செய்தியும் முற்றிலும் பொய்யானது என்றும், அவ்வாறான கடிதமொன்று இதுவரை எதிர்க்கட்சித் தலைவருக்குக் கிடைக்கப்பெறவில்லை என எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் உறுதி செய்துள்ளதாகவும் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்தார்.

பாராளுமன்ற செயலகத்தின் தலைமை பொறுப்பான செயலாளர் நயாகப் பதவியை ஒரு பெண்ணாகிய தான் வகிப்பதும், பாராளுமன்றத்தில் பல திணைக்களங்களின் தலைவர்களாக வருவதற்குப் பெண்களுக்கு வாய்ப்புக் கிடைத்துள்ளதும், பெண்களுக்குத் தமது கடமைகளை எந்தவித செல்வாக்கு மற்றும் துன்புறுத்தல்கள் இன்றி மேற்கொள்வதற்கான சூழல் மற்றும் கலாசாரம் பாராளுமன்றத்துக்குள் இருப்பதே என செயலாளர் நாயகம் மேலும் சுட்டிக்காட்டினார்.

இவ்வாறான நிலையில், இலங்கை பாராளுமன்றம் மற்றும் சபாநாயகர் ஆகியோரின் நற்பெயருக்குச் சேதம் விளைவிக்கும் வகையில் முற்றிலும் பொய்யான, இட்டுக்கட்டப்பட்ட மற்றும் அடிப்படையற்ற தகவல்கள் வெளியிடப்படுவது தொடர்பில் மிகவும் வருந்துவதாகவும், அவ்வாறான செய்திகளை வன்மையாகக் கண்டிப்பதாகவும் செயலாளர் நாயகம் மேலும் தெரிவித்துள்ளார்.




# ஐவர் பலி

ஏனைய நால்வரில் பஹல்கங்கபாத ஹசித ரணசிங்க, பொலவத்த வராஹேன சமீர மதுஷங்க, குருநாகல் கட்டுவனே புத்திக ராஜபக்ஷ மற்றும் தெமட்டகொட சம்பிரிய ஜயதிலக ஆகியோர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

தங்காலை நீதிமன்றத்தில் நடைபெறும் வழக்கு ஒன்றில் ஆஜராகுவதற்காக வந்துகொண்டிருந்த போதே, இந்த துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில், சம்பவ இடத்திலேயே நால்வர் துடிதுடித்து மரணித்துள்ளனர். மற்றுமொருவர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் மரணமடைந்துள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தங்கல்ல குடாவெல்ல பிரதேசத்தில் இடம்பெற்ற முக்கொலைக்கு பழிவாங்கு வகையிலேயே இந்த துப்பாக்கிப்பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக தங்களுக்குத் தகவல் கிடைத்துள்ளது என பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

டிபெண்டர் ரக வாகனமொன்றில் பயணித்தவர்களை இலக்கு வைத்து கெப்ரக வாகனமொன்றில் வந்தவர்களே இந்த துப்பாக்கிப் பிரயோகத்தை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸ் ஊடக பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

# எதிராக ஐ.ம.ச மனுத்தாக்கல்

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் மத்துமபண்டார இந்த மனுவை, ஜனாதிபதி சட்டத்தரணி பர்மான் காசிம் ஊடாக தாக்கல் செய்துள்ளார்.

மனுவைத் தாக்கல் செய்ததன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துரைத்த ரஞ்சித் மத்தும பண்டார எம்.பி,

“தேர்தல்கள் நடக்கவிருக்கும் இந்த காலப்பிரிவில், எதிர்க்கட்சியின் ஜனநாயகத்துக்கு விடுக்கப்பட்ட சவாலே இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலமாகும். யுத்தமொன்று இல்லாத தேர்தல் காலத்திலேயே இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை கொண்டு வந்துள்ளனர்.



சட்டத்தில் பயங்கரவாதத்துக்கான வரைவிலக்கணம், பயங்கரவாதி யார்? என்பது குறித்தான வரைவிலக்கணம் எதுவும் இந்த சட்ட மூலத்தில் குறிப்பிடப்படவில்லை. எந்தவொரு நபரையும் கைது செய்யலாம். அரசியல் கட்சிகளை ஒடுக்குவதற்கும், இந்நாட்டில் ஜனநாயகத்தை இல்லாதொழிக்கவுமே தேர்தலை எதிர்நோக்கியுள்ள சந்தர்ப்பத்தில் இதை மேற்கொள்கின்றனர். இதனாலேயே இந்நாட்டின் ஜனநாயகத்தைப் பாதுகாக்க இச்சட்ட மூலத்திற்கு எதிராக மனுவைத் தாக்கல் செய்துள்ளோம் என்றார்.

ஜனநாயகத்தையும், எதிர்க்கட்சியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சிகளையும் அடக்குமுறைக்குட்படுத்தவே தேர்தல் வருடமொன்றில் இந்த நிகழ்நிலை காப்பு சட்ட மூலத்தையும், இந்த பயங்கரவாத எதிர்ப்பு சட்ட மூலத்தையும் அரசாங்கம் கொண்டு வருவதாக பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார குற்றஞ்சாட்டினார்.

மனு தாரர் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி பர்மான் காசிம் மன்றில் ஆஜராகியிருந்தார்.

# கிழக்கில் கடும் எதிர்ப்பு

மட்டக்களப்பு-கல்லடிப் பாலம் அருகில் ஆரம்பமான பேரணி காந்திப்பூங்காவரை சென்று அங்கு ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. அதனையடுத்து கிழக்கு சிவில் பிரதிநிதிகளின் பிரகடனம் வாசிக்கப்பட்டது.

இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டவர்கள், பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் மற்றும் நிகழ்நிலைக் காப்புச் சட்டங்களுக்கு எதிரான வாசகங்களை எழுதிய பதாதைகளை ஏந்தியிருந்தனர். அத்துடன் கருத்துச் சுதந்திரத்தின் முக்கியத்துவம் தொடர்பான பதாதைகளையும் ஏந்தியிருந்தனர்.

முக்கியமாக இந்த எதிர்ப்பு நடவடிக்கையின் ஒரு பகுதியாக அமைக்கப்பட்டிருந்த உண்ணாவிரத பந்தல்கள் பாதுகாப்புத் தரப்பினரால் அகற்றப்பட்டன. இறுக்கமான பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியில் இந்த எதிர்ப்பு நடவடிக்கைகளை முன்னெடுக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மைத்திரியின் மகள் வீட்டில் கொள்ளை

பத்தரமுல்ல விக்ரமசிங்க புரவில் உள்ள இரண்டு மாடி வீடே உடைக்கப்பட்டு திருடப்பட்டுள்ளதாக தலங்கம பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

திருடப்பட்ட பொருட்களில் வீட்டின் அலுமாரியில் இருந்த 1,50,000 ரூபாய் பணம், தங்க முலாம் பூசப்பட்ட ஒட்டகச் சிலை, ஸ்மார்ட் கைக்கடிகாரம், தங்க முலாம் பூசப்பட்ட சிங்கப்பூர் நாணயங்கள் 8, உலருணவுப் பொருட்கள் மற்றும் பாடசாலை புத்தகப் பை என்பன உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகள் தன்னுடைய கணவனுடன் கொழும்பில் உள்ள வீட்டுக்கு வந்துள்ளனர். அப்போதே, வீடு உடைக்கப்பட்டுள்ளதாக பொலிஸாருக்கு தகவல் கொடுத்துள்ளனர்.

முன் கண்ணாடிக் கதவை உடைத்து வீட்டுக்குள் நுழைந்து சொத்துக்களைத் திருடிச் சென்றுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் மகளின் கணவரான வர்த்தகர், பொலிஸில் முறைப்பாடு செய்துள்ளதாகச் சிரேஷ்ட பொலிஸ் அதிகாரி மேலும் தெரிவித்தார்.

# “இந்திய மீனவர்களின் படகுகளை பறிமுதல் செய்து கைது செய்க”

தற்போது இலங்கை சிறையில் உள்ள இந்திய மீனவர்களை விடுவிப்பது தொடர்பாக வெளி வந்திருக்கும் தகவல்கள் வடபகுதியில் இருக்கும் மீனவர்கள் இதனை எவ்வாறு நோக்குகிறார்கள், இந்த பிரச்சினையை அரசாங்கம் எவ்வாறு முடிவுக்குக் கொண்டு வர இருக்கிறார்கள் என்பது தொடர்பாக வெளிப்படுத்த விரும்புகிறேன் என்றும் ஊடகங்களுக்கு ஞாயிற்றுக்கிழமை (22) மாலை கருத்துரைத்தார்.

குறிப்பாக ஒரு மாத காலப் பகுதிக்குள் வடக்கில் இருக்கின்ற நெடுந்தீவு, பருத்தித்துறை அதற்கு அப்பால் சில நாட்களுக்கு முன் மன்னார் கடற்பரப்புக்குள் கைது செய்யப்பட்ட 40க்கும் மேற்பட்ட தமிழக மீனவர்கள் கடற்றொழில் அமைச்சின் சிபாரிசுக்கு அமைய நல்லிணக்க அடிப்படையில் விடுவிக்கப்படுவதாக நாங்கள் ஊடகங்கள் வாயிலாக அறிகிறோம்.

இந்த தகவல் உண்மையில் கடற்றொழில் அமைச்சரின் நிலைப்பாடு என்ன? என்பதைக் கேள்விக் குறியாக்கியுள்ளது. குறிப்பாக இதேபோன்ற ஒரு விடயம் சில மாதங்களுக்கு முன்னர் இந்திய நிதியமைச்சர் தமிழ்நாட்டுக்கு வந்த போது அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க எந்தவித சட்ட நடவடிக்கைக்கு உட் படுத்தாது மீனவர்கள் 20 பேர் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

அந்த நேரத்திலும் நாங்கள் அதற்கு எங்களுடைய எதிர்ப்புக் குரலை வெளியிட்டு இருந்தோம். தற்போது கைது செய்யப்பட்டு சிறையில் இருக்கும் 40 மீனவர்களை விடுவிப்பதற்கு நாட்டில் ஜனாதிபதி ஒருவர் இல்லாத நிலையில் வெளிவிவகார அமைச்சரின் வேண்டுகோளுக்கு அமையக் கடற்றொழில் அமைச்சர் விடுவிப்பதாக அந்த செய்தி வெளியிடப்பட்டிருக்கிறது.

எனவே நாட்டில் ஜனாதிபதி இருந்தாலும் இதே நிலைதான் கடற்றொழில் அமைச்சர் இருந்தாலும் இந்த நிலை தான் என்றால் ஏன் இந்த கைதுகள் இடம் பெறுகின்றன? இவ்வளவு பணம் செலவு செய்து இந்த மீனவர்களைக் கைது செய்ய வேண்டுமா? என்ற கேள்வி இருக்கிறது.

இந்திய மீனவர்களின் வருகை முற்று முழுதாக நிறுத்தப்படவேண்டும். வடபகுதி கடற்பரப்புக்குள் அனுமதிக்கக் கூடாது என்பதையா நாங்கள் வலியுறுத்துகின்றோம் என்றார்.

ஆனால், வட பகுதி மீனவர்கள் முன்வைக்கின்ற எந்த கோரிக்கையையும் செவிசாய்க்காத அரசாங்கமும் இந்த கடற்றொழில் அமைச்சும் இந்திய உயர்மட்ட தலைவர்கள் தமிழ்நாடு வருகின்ற போது அவர்களால் விடுக்கப்படுகின்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டு மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்கின்றோம் எனக்கூறி விடுகின்றனர். தொடர்ந்து இந்த நிலைதான் காணப்படுகிறது.

இது மனிதாபிமானமா? அல்லது பயமா அவர்களுக்காக நாங்கள் பயப்படுகின்றோமா? ஒரு பெரிய நாடு சிறிய நாட்டை பயங்காட்டி தங்களுடைய வேலையைச் செய்விக்கின்றார்களா? என்ற கேள்வி எம்முன் எழுகின்றது.

நல்லிணக்க அடிப்படையில் நாம் விடுவிப்பது தவறு என்று நாங்கள் கூறவில்லை .ஆனால் நல்லிணக்கம் என்பது என்ன? ஒருவர் ஒரு தரம் வருகின்றார் மனிதாபிமானமாக அவரை விடுவிக்கின்றோம், இரண்டாவது முறை அதே தவறு செய்யும் போது எவ்வாறு அந்த மனிதாபிமானத்தை அல்லது நல்லிணக்கத்தைப் பற்றி பேசுவது?

எமது வளங்களை அழிக்கிறார்கள், எமது எல்லையைத் தாண்டி எமது கரையோரங்களுக்கு வந்து இந்த வேலை செய்கிறார்கள், எனவே, அவர்களைக் கைது செய்யுங்கள் அவர்களுடைய படகுகளைப் பறிமுதல் செய்யுங்கள் என நாங்கள் கூறுவது வெறுமனே கூச்சல் அல்ல. எமது வாழ்வாதார இழப்பு ,இந்த நாட்டின் இறைமை பறிபோகும் தன்மையை இந்த நாட்டின் பிரஜை என்ற வகையில் இங்கு வாழ்கின்ற மக்கள் என்ற வகையில் தொடர்ந்து வலியுறுத்துகின்றோம் என்றார்.

# சுகாதாரத் துறையின் பணிகளுக்கு AI தேவை



அதன்படி, செயற்கை நுண்ணறிவின் பயன்பாடு மருத்துவக் கல்வியின் தரத்தை மேம்படுத்த உதவும் என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், செயற்கை நுண்ணறிவு இப்போது நிஜமாகியுள்ளது. அதைப் புறக்கணிக்க முடியாது. செயற்கை நுண்ணறிவு சுகாதாரத்துறை மற்றும் மருத்துவ கல்விக்குப் பல நன்மைகளைக் கொண்டுள்ளது. மருத்துவத்தின் தரத்தை அதிகரிக்க, சுகாதார சேவைகளின் செயல்திறன் மற்றும் தரத்தை அதிகரிக்க, தகவல் தொழில்நுட்பத்தின் வளர்ச்சியுடன் தகவல்களின் அளவு மிக வேகமாக அதிகரித்துள்ளது.

உலகில் உள்ள அனைத்து தகவல்களையும் பற்றிய அறிவைப் பெறுவது ஒரு தனி நபருக்குக் கடினமாக உள்ளது. அத்தகைய சூழ்நிலையில் செயற்கை நுண்ணறிவு மிகவும் பயனுள்ளதாக இருக்கும். இலங்கையில் சுகாதார சேவைகள் மற்றும் அது தொடர்பான சேவைகளில் பயன்படுத்துவதற்குச் செயற்கை நுண்ணறிவை அறிமுகப்படுத்துவதற்கான திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

சுகாதாரப் பணியாளர்கள் வாழ்நாள் முழுவதும் கற்பவர்கள். இதுபோன்ற சூழ்நிலையில், செயற்கை நுண்ணறிவின் பலன் மிகப் பெரியது. நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க ரோபோடிக் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தலாம். எதிர்காலத்தில் தொலைதூரப் பகுதிகளில் உள்ள நோயாளிகளுக்கு சிகிச்சையளிக்க செயற்கை நுண்ணறிவின் கீழ் நாங்கள் சேவைகளை வழங்க முடியும்.

அத்துடன், கணினி அறிவியலின் பரந்த கிளையாக செயற்கை நுண்ணறிவு (Artificial intelligence - AI) இருக்கிறது. பொதுவாக, மனித நுண்ணறிவு தேவைப்படும் பணிகளைச் செய்யும் திறன் கொண்ட இயந்திரங்களை உருவாக்கச் செயற்கை நுண்ணறிவின் பங்கு பெருமளவில் தேவையாக இருக்கிறது.

உற்பத்தித் திறனை அதிகரிக்கவும், உலகளாவிய வளர்ச்சியை அதிகரிக்கவும் மற்றும் உலகம் முழுவதும் வருமானத்தை உயர்த்தவும் கூடிய தொழில்நுட்ப புரட்சியின் விளிம்பில் நாம் இருக்கிறோம்.

இந் நிலையில், செயற்கை நுண்ணறிவின் விரைவான முன்னேற்றம் உலகைக் கவர்ந்துள்ளது, இது உற்சாகத்தையும் எச்சரிக்கையையும் ஏற்படுத்தியுள்ளது. சர்வதேச நாணய நிதியம் AI தொழில்நுட்பத்தின் வளர்ச்சியானது எதிர்காலத்தில் தொழில் வாய்ப்புகளில் 60 சதவீத பாதிப்பினை ஏற்படுத்தும் என்று அண்மையில் எச்சரித்துள்ளதுள்ளமை குறிப்பிடத்தக்கது.

AI பயன்பாடுகள் தற்போது மனிதர்களால் செய்யப்படும் முக்கிய பணிகளைச் செய்யலாம், இது தொழிலாளர் தேவையைக் குறைக்கலாம், இது குறைந்த ஊதியம் மற்றும் குறைக்கப்பட்ட பணியமர்த்தலுக்கு வழிவகுக்கும் என்றும் கூறப்படுவதாக தெரிவித்தார்.

# சா/த விண்ணப்பத்தில் கடும் கட்டுப்பாடு

பாடசாலை பரீட்சார்த்திகள் பாடசாலை அதிபரின் ஊடாகவும், தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தனிப்பட்ட ரீதியிலும் விண்ணப்பிக்க வேண்டும். தனிப்பட்ட பரீட்சார்த்திகள் அரச மற்றும் அரசாங்கத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பாடசாலைகளில் இருந்து (விலகிய சான்றிதழை) கட்டாயமாக முன்வைக்கப்படவேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தனிப்பட்ட பரீட்சார்த்திகள் தேசிய அடையாள அட்டையைச் சமர்ப்பிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. 15 வயதுக்கும் குறைந்த தனிப்பட்ட பரீட்சார்த்திகள், சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்ற எதிர்பார்த்திருந்தால், விண்ணப்பம் செய்வதற்காகப் பரீட்சைகள் திணைக்களத்துக்கு சமூகமளிக்க வேண்டும் என்றும் ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார்.

விண்ணப்பங்களை wdoenets.lk அல்லது wonlineexams.gov.lk என்று பரீட்சை திணைக்கள இணையத்தளங்களுக்குச் சென்று விண்ணப்பிக்க முடியும்.

மேலதிக விபரங்களை 0112784208, 012784537 அல்லது 0112785922 என்ற இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு அறிந்துகொள்ள முடியும் என்றும் தெரிவித்துள்ளார்.

# குளிசைகளை விழுங்கிய பேராசிரியர் மரணம்

மரணமடைந்த பேராசிரியரின் மனைவியும் பேராதனை பல்கலைக்கழகத்தின் பிரதான நூலகத்தில் பணிபுரிந்து வருவதாகவும் கூறப்படுகிறது.

ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பேராசிரியர் ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 1 மணியளவில் உயிரிழந்துள்ளதாகவும் பிரேதப் பரிசோதனையின் பின்னரே மரணத்திற்கான காரணம் தெரியவரும் எனவும் பேராதனை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# இரு நாள் விவாதம்

இந்த சட்டமூலத்தை நிறைவேற்றிக்கொள்ள வாக்கெடுப்பு நடத்தப்படலாம் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. இந்த சட்டமூலத்தை ஆராயும்போது, பல திருத்தங்களை உள்ளடக்குவதற்கு அரசாங்கம் எதிர்பார்த்துள்ளது என்றும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்த சட்டமூலத்தை பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ், முதலாவது வாசிப்புக்காக பாராளுமன்றத்தில் அண்மையில் சமர்ப்பித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## ஸ்ரீதரனுக்கு வாழ்த்து...



யது பாஸ்கரன்

இலங்கை தமிழரசு கட்சியின் புதிய தலைவராக இரகசிய வாக்கெடுப்பின் ஊடாக தெரிவு செய்யப்பட்ட யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான எஸ்.ஸ்ரீதரனுக்கு பலரும் வாழ்த்துகளை தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில், கிளிநொச்சி நகர சித்தி விநாயகர் ஆலயத்தில் ஞாயிற்றுக்கிழமை (21) மாலை நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளிலும் கலந்து கொண்டுள்ளார்.

## ஆளுநர் செந்தில் வாழ்த்து



தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள சிவஞானம் ஸ்ரீதரனுக்கு, கிழக்கு மாகாண ஆளுநரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவருமான செந்தில் தொண்டமான் வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

உங்களுடைய சேவைக் காலத்தில் தமிழ் மக்களுக்கான உரிமைகள் வென்றெடுக்கப்பட்டு தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு கிடைக்க வேண்டும் என்பதோடு, வடக்கு, கிழக்கு தமிழர்கள் மாத்திரமின்றி நாடு முழுவதும் உள்ள தமிழர்கள் மென்மேலும் வளர்ச்சி அடைய தங்களின் பணி தொடர வேண்டுமெனவும் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## பிள்ளையான் வாழ்த்து




தமிழரசு கட்சியின் தலைவராக தெரிவு செய்யப்பட்டிருக்கும் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரனுக்கு தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் தலைவரும், கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்தி குழு தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் (பிள்ளையான்) தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

நீண்ட நெடிய அரசியல் வரலாற்றினை கொண்ட எம் சமூகத்தின் பழம்பெரும் கட்சி ஒன்றுக்குத் தலைமை ஏற்றிருக்கும் தங்கள் பயணம் வெற்றுக் கோச சித்தாந்த அரசியலுக்கப்பால் தமிழ் மக்களின் நிலம், நிர்வாகம், உரிமை மற்றும் இருப்பு சார்ந்து வெற்றியடைய வேண்டும்.

அத்துடன், மேட்டுக்குடிகளின் நலன்களுக்கு அப்பால் ஒடுக்கப்படும் அடிமட்ட சாமானிய மக்களின் நலன் பேணும் தலைமையாக தங்கள் வரலாற்றுப் பாத்திரமானது புதிய பாதையில் பயணிக்க வேண்டும் என்று விரும்புகிறேன் என்றும் அவர் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## ஜீவன் வாழ்த்து



இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டுள்ள யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரனுக்கு, இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

இலங்கை தமிழரசுக் கட்சி ஆரம்பமானது முதல் இன்று வரை மலையக மக்களையும் அரவணைத்துக்கொண்டே பயணித்துள்ளது. அம்மக்களுக்காகக் குரல் கொடுத்துள்ளது. புதிய தலைவரும் அதே வழியில் பயணிப்பாரென நம்புகின்றோம் எனவும் ஜீவன் தொண்டமான் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

### விழா மண்டபங்களுக்கான முற்பதிவு

# 10% அதிகரிப்பு

நாட்டில் நிலவும் பொருளாதார நெருக்கடிகளுக்கு மத்தியில், முற்பதிவுகளுக்கான கட்டணங்களை அதிகரிப்பதற்கு அகில இலங்கை விழா மண்டப மற்றும் உணவு விநியோகஸ்தர் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்கமைவாக, எதிர்வரும் நாட்களில் மேற்கொள்ளப்படும் முற்பதிவுகளுக்கான கட்டணத்தை 10 சதவீதத்தால் அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அகில இலங்கை விழா மண்டப மற்றும் உணவு விநியோகஸ்தர் சங்கத்தின் தலைவர் சாலிய ரவீந்திர தெரிவித்துள்ளார்.

தற்போது அனைத்து துறைகளின் பொருளாதார வளர்ச்சியும் 50 சதவீதத்தால் குறைவடைந்து செல்லும் நிலையே காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், மரக்கறிகள் மாத்திரமின்றி, அனைத்து உணவுப்பொருட்களின் விலைகளும் சடுதியாக அதிகரித்துள்ளதால், நட்டத்தை ஈடு செய்ய முடியாத நிலைமையே விழா மண்டப உரிமையாளர்களுக்கு உள்ளதாக அவர் கூறியுள்ளார்.

அத்துடன், திருமண மண்டபங்கள், விழாக்களுக்கான மண்டபங்கள் என்பனவற்றுக்கான உணவு விநியோகம் உள்ளிட்ட பல்வேறு சேவைகளை வழங்கும் தமது தொழில்சார் உறுப்பினர்கள் பாரிய பொருளாதார நெருக்கடியை எதிர்கொண்டுள்ளமையை கருத்திற்கொண்டு முற்பதிவுகளுக்கான கட்டணங்களை 10% அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டதாகவும் சாலிய ரவீந்திர தெரிவித்துள்ளார்.

## ஆணின் சடலம் மீட்பு

ரஸீன் ரஸ்மின்



புத்தளம் - மதுரங்குளி களப்பு பிரதேசத்தில் இருந்து இனந்தெரியாத ஆண்ணொருவரின் சடலமொன்று திங்கட்கிழமை (22) பகல் மீட்கப்பட்டுள்ளதாக மதுரங்குளி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மதுரங்குளி பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில், அங்குச் சென்ற பொலிஸாரும், புத்தளம் தடயவியல் பொலிஸாரும் இணைந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளதுடன், சடலமாக மீட்கப்பட்டவர் தொடர்பில் இதுவரை தகவல் எதுவும் தெரியவில்லை எனவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

களப்பு பகுதியில் இருந்து மீட்கப்பட்ட சடலம், நீதிவான் விசாரணையின் பின்னர் பிரேதப் பரிசோதனைக்காக புத்தளம் தள வைத்தியசாலைக்கு அனுப்பப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## முந்தல் விபத்தில் மூவர் படுகாயம்

ரஸீன் ரஸ்மின்பு



புத்தளம் - கொழும்பு பிரதான வீதியின் முந்தல் 15ஆம் மைல் கல் பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (20) இடம்பெற்ற வாகன விபத்தில் பிரதேச சபை ஊழியர்கள் மூவர் காயமடைந்துள்ளனர்.

புத்தளம் பிரதேச சபைக்குச் சொந்தமான குப்பைகளை ஏற்றும் உழவு இயந்திரத்தில் கடமை புரியும் ஊழியர்களே இவ்விபத்துக்கு முகம் கொடுத்துள்ளனர்.

புத்தளத்திலிருந்து கொழும்பு நோக்கிச் சென்ற தனியார் சொகுசு பேருந்து, முந்தல் பகுதியில் பயணித்துக் கொண்டிருந்த போது, முன்னால் சென்ற புத்தளம் பிரதேச சபைக்குச் சொந்தமான குறித்த உழவு இயந்திரத்தை முந்திச் செல்ல முற்பட்ட போது, எதிர்த்திசையில் பயணித்த காருடன் மோதியதுடன், முன்னால் சென்ற உழவு இயந்திரத்தின் பின்பக்கமாக மோதியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விபத்தில் புத்தளம் பிரதேச சபைக்குச் சொந்தமான உழவு இயந்திரத்தில் பயணித்த மூன்று ஊழியர்கள் காயமடைந்துள்ள நிலையில் முந்தல் மாவட்ட வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

இவ்வாறு, வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட மூன்று ஊழியர்களும், மேலதிக சிகிச்சைக்காக முந்தல் வைத்தியசாலையில் இருந்து சிலாபம் ஆதார வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை முந்தல் போக்குவரத்துப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## போதையில் விபத்து; நால்வர் கைது

குடிபோதையில் காரை செலுத்தி களனி - தோரண சந்தியில் வைத்து இரண்டு மோட்டார் சைக்கிளுடன் மோதி, விபத்து ஏற்படுத்தித் தப்பிச்சென்ற சாரதி உட்பட நால்வரை வத்தளை-ஹேக்கித்த பிரதேசத்தில் வைத்து ஞாயிற்றுக்கிழமை (21) கைது செய்துள்ளதாக பேலியகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

குறித்த சாரதி உட்பட நண்பர்கள் நால்வரும் திருமண வைபவமொன்றில் கலந்துகொண்டு மதுபோதையில் வீட்டுக்குச் சென்று கொண்டிருந்த போது கொழும்பு - கண்டி பிரதான வீதியில் தோரண சந்தியில் வைத்து இவ்விபத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த பெண் ஒருவரும் காயமடைந்து ராகம வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதுடன், இச்சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக பேலியகொட பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## யானை தாக்கி வயோதிபர் மரணம்

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை - கிண்ணியா, வான் எல பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட செம்பி மொட்டை காட்டுப் பகுதியில் ஞாயிற்றுக்கிழமை (21) யானை தாக்கி வயோதிபர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

ஆயிலியடி பகுதியைச் சேர்ந்த 68 வயதுடைய எம்.எஸ்.முஹமட் யாகூப் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

செம்பி மொட்டை அரசுக்கு சொந்தமான காட்டுப் பகுதியில் மரம் வெட்டிக் கொண்டிருந்தபோது, யானை தாக்கியதாக தெரியவந்துள்ளது.

மேலும், தடை செய்யப்பட்ட காட்டுப் பகுதிக்குள் சென்று மரம் வெட்டிக் கொண்டிருந்தபோது யானை தாக்கி விழுந்து கிடந்துள்ளார். அந்த இடத்துக்கு அருகில் உள்ள வயல் உரிமையாளரான அவரது மகன், தந்தையை தூக்கிக் கொண்டுவந்து யானை மின் வேலிக்கு அருகில் கொண்டு வரும்போது தந்தை உயிரிழந்துவிட்டார் என பொலிஸாருக்கு வாக்குமூலம் வழங்கியுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலத்தை விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்க உள்ளதாகவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் வான்எல பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## தப்பிச் சென்ற கைதி மீண்டும் கைது

மாத்தறை சிறைச்சாலையிலிருந்து தப்பிச் சென்ற கைதி ஒருவர் காலி ரயில் நிலையத்தில் வைத்து காலி சிறைச்சாலை அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் மாத்தறை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் இன்னும் சில சிறைச்சாலை கைதிகளுடன் மாத்தறையில் உள்ள பிரிவெனா ஒன்றிற்கு பணி நிமித்தம் அழைத்துச் செல்லப்பட்டபோது அங்கிருந்து தப்பிச் சென்று தனியார் பஸ் ஒன்றில் காலி பிரதேசத்திற்கு சென்றுள்ளார்.

இதனையடுத்து, காலி ரயில் நிலையத்திற்கு வந்து ரயிலில் ஏற முற்பட்டபோது காலி சிறைச்சாலை அதிகாரிகளால் குறித்த சந்தேக நபரை கைது செய்துள்ளனர்.



## துயிலும் இல்லத்தில் அகவணக்கம் செய்தார்

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் ஸ்ரீதரன் கிளிநொச்சி-கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் வணக்க நிகழ்வில் கலந்து கொண்டுள்ளார்.

இலங்கைத் தமிழரசு கட்சியின் தலைவர் தெரிவு, திருகோணமலையில், ஞாயிற்றுக்கிழமை (21) காலை இடம்பெற்றுள்ளது. அதில், தலைவராகத் தெரிவான எஸ்.ஸ்ரீதரன், அன்று மாலை 5.30 மணியளவில் கிளிநொச்சிக்குத் திரும்பிப் பல நிகழ்வுகளிலும் பங்கேற்றுள்ளார்.

மேலும், கனகபுரம் மாவீரர் துயிலும் இல்லத்தில் வணக்க நிகழ்வில் பங்கேற்றதன் பின்னர், கிளிநொச்சி நகரச் சித்தி விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற விசேட பூஜை வழிபாடுகளிலும் கலந்து கொண்டுள்ளார்.

## சகோதரியை தாக்கியவர் மைத்துனரால் கொலை

குடிபோதையில் வந்து மனைவியைத் தாக்கிய மைத்துனரை, கோடாரியால் தாக்கி கொலை செய்யப்பட்ட சம்பவமொன்று தெஹியோவிட்ட பிரதேசத்தில் ஞாயிற்றுக்கிழமை (21) மாலை பதிவாகியுள்ளது.

திகல பிரதேசத்தைச் சேர்ந்த 42 வயதுடையவரே இந்த தாக்குதலில் உயிரிழந்துள்ளார் என தெஹியோவிட்ட பொலிஸார் தெரிவித்துள்ளனர். உயிரிழந்தவர் குடிபோதையில் வந்து தனது சகோதரியைத் தாக்கியதாகவும், அதனைப் பார்த்த அவரது கணவர் கோடரியால் தாக்கி தனது மைத்துனரைக் கொலை செய்துள்ளதாகவும் பொலிஸாரின் ஆரம்பக்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

தாக்குதல் நடத்திய 43 வயதுடைய நபரைக் கைது செய்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

## புதையல் தோண்டிய நால்வர் கைது

கிரிவத்துடுவ பிரதேசத்தில் வீடொன்றுக்கு முன்பாக புதையல் தோண்டிய ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் உட்பட நால்வர் கஹதுடுவ பொலிஸாரால் கைது செய்யப்பட்ட சம்பவமொன்று பதிவாகியுள்ளது.

புதையல் தோண்டுவதாகக் குற்றப்புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற தகவலொன்றின் அடிப்படையில் குறித்த நால்வரைக் கைது செய்யப்பட்டதாகவும் கைது செய்யப்பட்டவர்களில் இளம் தம்பதிகள், பெண்ணின் சகோதரர், மற்றுமொரு நபரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களிடமிருந்து தண்ணீர் மோட்டார், மண்வெட்டிகள், இரும்பு கத்திகள் போன்ற பல உபகரணங்கள் பொலிஸாரினால் கைப்பற்றப்ப ட்டுள்ளதாகவும் தெரியவந்துள்ளது.



# மகிழ்வூட்டல் கூத்துக்கள் மலையக பிரச்சினைகளுக்கு தீர்வாகாது

ஒரு சமூகத்தின் உரிமைகள் எவை? அதில், எத்தனை உரிமைகள் கிடைத்துள்ளன என்பன பற்றிய பொதுவான அறிவு, அந்த சமூகத்துக்கு இருக்காத வரையிலும் பெற்றெடுக்கவேண்டிய உரிமைகள் புதைக்கப்பட்டுவிடும்.

மலையகத்தைப் பொறுத்தவரையில் அரசியலும் தொழிற்சங்கமும் வேறுவேறு என்பதைப் பகுத்தறிந்து கொள்ளவேண்டும். மலையகத்துக்கான வரையறை என்ன? அச்சமூகத்துக்கான உரிமைகள் எவை என்பதைக் கண்டறிந்து குரல்கொடுக்கும் வரையிலும், முதுகிலேறி காவடியெடுப்பவர்கள் இருக்கத்தான் செய்வார்கள்.

மலையகத் தமிழர்களின் காணியுரிமை, வீட்டுரிமை என்பன இன்றுவரை அங்கீகரிக்கப்படாமை, தொழில் உரிமைகள், பெண் தொழிலாளர் உரிமைகள், அவர்களின் பாதுகாப்பு, தொழில்சார் நலன்களின் பாதுகாப்பு என்பன மீறப்படுவதன் மூலம் அவர்களின் குடியியல் உரிமைகள் மீறப்படுகின்றன.

மலையக மக்களின் அரசியல் மற்றும் சிவில் உரிமைகள் தொடர்ச்சியாக மீறப்பட்டுவருவதாக ஐ.நாவின் மனித உரிமைகள் ஆணையர் நவி பிள்ளையிடம் 2013 ஒகஸ்டில் சுட்டிக்காட்டப்பட்டது. எனினும், பிரச்சினைகள் அப்படியேதான் இருக்கின்றன.

வருடத்தில் ஒவ்வொரு மாதங்களிலும் வரும் சமய நிகழ்வுகளுடன், கூத்தாடிவிட்டு, அம்மக்களின் உண்மையான பிரச்சினைகள் தீர்க்கப்படாமலும், மழைக்கு முளைக்கும் காளான்களைப் போல், அந்தந்த காலத்தில் தூசிதட்டி உசுப்பேற்றுவதுமே இதுவரையிலும் நடந்திருக்கின்றன.

தை பிறந்தால் வழி பிறக்கும் என்பதே தமிழர்களின் அதீத நம்பிக்கையாகும். நமது நாட்டை பொறுத்தவரையில் 'வழி'யல்ல 'வலி'தான் பிறந்தது. இந்த 'வலி', மலையக மக்கள் கடுமையாக வாட்டி வதைக்கிறது.

வாழ்வதற்கான வீடு இல்லை, லயன் அறைகளில் சொல்லொண்ணா துயரங்களும் வாழும் வாழ்க்கை முறைமை, சுத்தமான குடிநீர் வசதியில்லை. இப்படியே அடுக்கிக்கொண்டு போகலாம். இதில், பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு எட்டாக்கனியாகவே இருக்கின்றது.

பொங்கலுக்கு முன்னர் சம்பளம், இல்லையேல் வேலை நிறுத்தம் என உசுப்பேற்றி, தீபாவளி வரையிலும் நாட்களை இழுத்துச் செல்லும் கைங்கரியத்தைச் செய்யக்கூடிய தலைவர்கள் மட்டுமே மலையக மக்களுக்குக் கிடைத்துள்ளனர் என்பது வெட்கக்கேடானது.

இன்னும் சில தலைவர்கள் ஆட்சியதிகாரம் எங்கள் கைகளில் இல்லையெனப் பந்தைப் பரிமாற்றம் செய்துவிட்டு, மௌனிகளாகி விடுகின்றனர். ஒரு சிவில் சமூகத்தினர் அங்கொன்றும் இங்கொன்றுமாக சலாப்புக்கு ஆர்ப்பாட்டங்களைச் செய்துவிட்டு அமைதியாக இருந்துவிடுகின்றனர்.

இதற்கிடையில் தான், ஹட்டன் டன்பார் மைதானத்தில் நடத்தப்பட்ட பொங்கல் விழா தொடர்பிலான விமர்சனங்கள் தூள் பறக்கின்றன. விழாவுக்கு அழைத்துவரப்பட்ட தென்னிந்திய நடிகைகள் மேடையில் நடந்துகொண்ட விதம், அருவருப்பை ஏற்படுத்தியிருந்தன.

அவர்களில் சிலர் அணிந்திருந்த ஆடை, கலாசாரத்தை கிள்ளியெறியும் வகையில் அமைந்திருந்தன இதற்கிடையில் செல்பி வேறு, இவையெல்லாம் மலையக மக்களின் உரிமைக் குரலுக்கு எவ்வாறு வலு சேர்க்கப் போகின்றது.

தங்களுக்குப் பின்னால் கூட்டம் சேரவேண்டும். நடிகைகளை அழைத்துவந்து கூட்டத்தைச் சேர்த்து, கூத்தாடிவிடக் கூடாது என்பதே எமது வலியுறுத்தலாகும். இவையெல்லாம், அடுத்தடுத்த தேர்தல்களில் நல்ல பாடங்களைக் கற்றுக்கொடுத்துவிடும் என்பது கடந்தகால கசப்பான பாடங்களாகும் என்பதை நினைவில் கொள்க.

தமிழ்Mirror www.tamilmirror.lk க்கு
எழுதுங்கள்

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

உங்களுடன் நண்பர்கள் சுற்றியிருக்க விரும்பும்போது, நீங்கள் தேவையில்லாமல் விலகினால், உங்களுக்கு மனச்சோர்வு இருக்கின்றது என்று அர்த்தம். இதற்கு ஒரே வழி, நீங்களே உங்களுடன் தோழமை கொள்வதுதான். உங்களுக்கு நீங்களே எஜமானன். அத்துடன், உங்களுக்கு நீங்களே நம்பிக்கையான நபரும் கூட!

ஒருவரிடம் பணம் இருக்கும்போது, அவரைச் சுற்றி, பலர் சேர்ந்துவிடுவார்கள். அவரிடம் இருக்கும் பணத்தைச் செலவழிக்கச் செய்த பின்னர், அவரைக் கைகழுவி, நடுத்தெருவில் விட்டுவிடுவது உலக யதார்த்தம். நண்பர்கள் என்று நம்பி, அவர்கள் கெட்டவர்கள் என்று தெரியாமல் போனவர்களை நாங்கள் அன்றாடம் சந்தித்துக்கொண்டிருக்கின்றோம். நண்பர்களிடம் நம்பி இயலாது, என்னால் முடியாது எனும் எண்ணங்கள் தகர்க்கப்படல் வேண்டும். அனுபவப்பட்டவர்களுக்கு ரோசம் அதிகம். எளிதில் எவருடனும் நட்புக் கொள்ளல் ஆகாது. வீறு பெற்றவனை வீழ்த்த முடியாது. நடுவீதியில் தனிமைப்பட்டு நிற்பது பரிதாபமானது.

எனவே, துணிவுடன் இயங்குவதே மனோபலத்தை உருவாக்கும்.

நன்றி–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தேர்தலும், பொங்கலும் உணர்த்தும் பாடங்கள்

**மொஹமட் பாதுஷா**

இலங்கை தமிழரசுக் கட்சியின் புதிய தலைவராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஸ்ரீதரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார். திருகோணமலையில் ஞாயிறன்று (21) இடம்பெற்ற கட்சியின் உள்ளக வாக்கெடுப்பில் 184 வாக்குகளைப் பெற்று அவர் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவருடன் போட்டியிட்ட எம்.ஏ.சுமந்திரன் எம்.பி. 137 வாக்குகளைப் பெற்றுள்ளார். இந்த அடிப்படையில் ஏதோ ஒரு வகையில் ஜனநாயகமான தோற்றப்பாட்டுடன் இந்த தலைவர் தெரிவுக்கான தேர்தல் இடம்பெற்றிருக்கின்றது என்று கூறலாம்.

வழக்கமான ஏனைய தேர்தல்களைப் போல ஒரு வேட்பாளருக்கு ஆதரவான வாக்குகள் மட்டுமன்றி மற்றயவருக்கு எதிரான வாக்குகளும் குறித்த வேட்பாளருக்கு விழுந்திருக்கும். அத்துடன், போட்டியிலிருந்து விலகிக் கொண்ட முன்னாள் எம்.பி. யோகேஸ்வரனின் வாக்குகளும் ஸ்ரீதரன் பக்கமே பெருமளவுக்குச் சென்றிருக்கும் என கருதலாம்.

தமிழ்த் தேசிய அரசியலின் போக்குகள் பற்றி பலவிதமான விமர்சனங்கள், வாதப் பிரதிவாதங்களும் இருக்கின்றன.

தமிழரசுக் கட்சி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அரசியல் நகர்வுகள் பெரிதாக எதனையும் சாதிக்கவில்லை என்ற விமர்சனங்களில் உண்மை இல்லாமலும் இல்லை.

அதனையெல்லாம் தாண்டி, இப்படியான ஒரு வாக்கெடுப்பின் ஊடாக புதிய தலைவர் தெரிவு செய்யப்பட்டுள்ளமை நல்லதொரு முன்மாதிரியாகும். ஒரு பக்குவப்பட்ட, ஜனநாயக வழிமுறையிலான அரசியல் கலாசாரத்தை இன்னும் இந்தக் கட்சி கொஞ்சமேனும் பின்பற்றி வருவதான ஒரு பிம்பத்தை இது வெளிக்காட்டி நிற்கின்றது.

ஆனால், திருமலையில் தமிழரசுக் கட்சி இப்படியான ஒரு பணியைச் செய்து கொண்டிருந்த சமகாலத்தில் மலையகத்தில் தென்னிந்திய நடிகைகளின் பங்கேற்புடன் பொங்கல் விழா என்ற ஒரு நிகழ்வு இடம்பெற்றுக் கொண்டிருந்தது. இதனை ஒரு கலாசார, நிகழ்வு என்பதை விட அரசியல் மகிழ்வூட்டல் கூத்து என்றுதான் சமூக வலைத்தள செயற்பாட்டாளர்கள் வகைப்படுத்துகின்றனர். மாலைத்தீவுகளில் இருந்து இந்திய இராணுவத்தை வெளியேறுமாறு கூறிய பிறகு இலங்கையில் குறிப்பாக வடக்கு, கிழக்கில் இந்தியா தனது கால்களை மீண்டும் ஊன்றலாம் என்ற நிலை உருவாகியுள்ளது. வடக்கு, கிழக்கு தமிழர்களைப் போல மலையக மக்களையும் தமிழகம் தனது அரசியலுக்காகப் பயன்படுத்தலாம் என்பது பலராலும் ஊகிக்கப்படுகின்ற விடயமாகும்.

இந்தியாவின் செல்வாக்கு அதிகரித்து வரும் கிழக்கு மாகாணத்தில் முன்னதாக, அந்நாட்டுப் பாணியிலான ஒரிரு நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன. இப்போது இந்திய நடிகைகளின் பங்குபற்றுதலுடன் மலையகத்தில் பொங்கல் நிகழ்வு இடம்பெற்றிருக்கின்றது. இதுவே கடுமையான விமர்சனங்களை எதிர்கொண்டுள்ளது. இதனை இரண்டு விதமாகவும் நோக்கலாம்.

இலங்கையில் வாழ்கின்ற எல்லா இன மக்களுக்கும் ஒரு கலாசார மரபு, பாணி இருக்கின்றது. மலையக மக்கள் இந்தியாவைப் பூர்வீகமாகக் கொண்டவர்கள் என்றாலும் அவர்களுக்கு இருக்கின்ற பிரச்சினைகள் வேறுவிதமானவை. இலங்கைச் சூழல் சார்ந்தவை என்பதை மறந்து விடக் கூடாது.

தமிழர் கலாசார நிகழ்வுகள் இடம்பெறுவது நல்ல விடயமே. இருப்பினும், இந்தியாவின் தேர்தல் மேடைகளைப் போல, நடிகர் நடிகைகளைப் பயன்படுத்தி மக்களைக் களிப்பூட்டுவதால் இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்து வைக்க முடியாது. அது நமது பிரச்சினைகளை நாமே தரக்குறைவாக மதிப்பிடுவதாக ஆகிவிடலாம்.

சினிமாத்தனமான, வெறுமனே கொண்டாட்டங்களை மட்டுமே மையமாகக் கொண்ட நிகழ்வுகளை அரசியல்வாதிகள், அதிகாரிகள் நடத்துவது வடக்கு, கிழக்கிலும் மலையகத்திலும் வாழும் மக்கள், தமது சுயத்தை இழப்பதற்கான ஆரம்பப் புள்ளியாக அமையலாம் என்பதை மறந்து விடக் கூடாது.

மலையக பொங்கல் நிகழ்வு இதற்கு மிகப் பிந்திய உதாரணமாகும். நமது அரசியல் எங்கே போய்க் கொண்டிருக்கின்றது என்பதைச் சிந்திக்க வேண்டிய நிர்ப்பந்தத்தை இது ஏற்படுத்தியுள்ளது,

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது தமிழ் மக்களின் விடுதலை, உரிமை, தீர்வு என்று காத்திரமான விடயங்களை முன்னிறுத்தியே அரசியல் செய்கின்றது. 'இவர்கள் எதனைப் பெற்றுக் கொடுத்துள்ளார்கள்?' என்ற கேள்விக்கு விடையில்லை. இருப்பினும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் உலக அரங்கிற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளன.

பொதுவாகக் கட்சிகள் தலைமைத்துவப் பதவிக்காக அடிபட்டுக் கொண்டும், ஜனநாயக வழிமுறைகளை மீறியும் செயற்பட்டுக் கொண்டிருக்கின்ற ஒரு காலப் பகுதியில் தமிழரசுக் கட்சி ஒரு வாக்கெடுப்பை நடத்தி தலைவரைத் தெரிவு செய்துள்ளமை அக்கட்சியின் இன்னுமொரு முன்மாதிரியாகவே தெரிகின்றது.

இவற்றையெல்லாம், மலையகக் கட்சிகளும் முஸ்லிம் கட்சிகளும் எப்போது உள்வாங்கப் போகின்றன என்ற கேள்விதான் இவ்விடத்தில் எழுகின்றது.

முஸ்லிம் கட்சிகளில் தலைவர் பதவிக்கான மோகம் எப்போதும் உள்ளது. தலைவர் தெரிவு ஒரு ஜனநாயக அடிப்படையில், வாக்கெடுப்பின் ஊடாக இடம்பெறுவது மிகக் குறைவு. பதவியில் இருக்கின்ற தலைவர் இன்னுமொருவரைத் தெரிவு செய்வதற்கான கதவுகளைத் திறந்து விடுவதும் இல்லை.

அநேகமான ஜனநாயக நடைமுறைகள் முஸ்லிம் கட்சிகளுக்குள் இல்லை. பெயருக்குத்தான் அரசியல் உயர் பீடம், மாவட்டக் குழுக்கள் இருக்கின்றன. காலாகாலத்திற்கும் கட்சியை தமக்கு எழுதி வைத்தாற்போல் பதவியில் இருக்கவே அவர்கள் விரும்புகின்றனர் என்ற பிம்பத்தையே இது ஏற்படுத்துகின்றது.

இந்த நிலைமை மாற வேண்டும். நாம் முன்னைய பத்திகளில் குறிப்பிட்டதைப் போல முஸ்லிம் கட்சிகள் சமூக விடயங்களுக்காக முன்னிற்கின்ற துணிச்சலை, தமிழரசு கட்சியை மையமாகக் கொண்ட வடக்கு, கிழக்கின் ஒரு சில தமிழ் அரசியல்வாதிகளிடம் இருந்து கற்க வேண்டும். அதேபோன்று, முஸ்லிம் கட்சிகளுக்குள் மேல் மட்டத்திலும் கீழ் மட்டத்திலும் நடக்கின்ற தெரிவுகளை வெளிப்படையானதாக மாற்றியமைக்க வேண்டும். உரிய காலத்தில் பதவிகளில் மாற்றம் கொண்டு வரப்பட வேண்டும்.

தற்போதுள்ள தலைவர்தான் மீண்டும் தலைவராகத் தெரிவு செய்யப்பட்டாலும் பரவாயில்லை. ஆனால் உட்புறமாகக் காய்நகர்த்தாமல் பட்டவர்த்தனமான ஜனநாயகப் பொறிமுறை ஒன்றின் ஊடாக அதனைச் செய்ய வேண்டும். அதற்குத் தமிழரசுக் கட்சியின் புதிய தலைவர் தெரிவு ஒரு உதாரணமாக எடுத்துக் கொள்ளப்படலாம்.

இந்த நாட்டில் உண்மையாகவே அதிகம் பாதிக்கப்பட்ட, வஞ்சிக்கப்பட்ட மக்கள் மலையகத்தில் வாழும் மூவின மக்களும்தான் என்பதை மறந்து விடக் கூடாது. எனவே, மலையகக் கட்சிகளும் தமது போக்கை மறுபரிசீலனை செய்ய வேண்டியுள்ளது. நடிகைகளின் பங்கேற்புடனான பொங்கல் நிகழ்வு அப்படியொரு தேவையை உணர்த்துகின்றது.

அமரர் சௌமியமூர்த்தி தொண்டமான் ஒரு விடிவெள்ளியாக இருந்ததை யாரும் மறுக்க முடியாது. ஆனால், அவரது காலத்திற்குப் பிறகு இன்று வரை மலையக மக்களின் எத்தனை பிரச்சினைகளை அங்குள்ள அரசியல்வாதிகள் தீர்த்து வைத்துள்ளனர்? தோட்டத் தொழிலாளர்களின் வாழ்வு எந்தளவுக்கு முன்னேறியுள்ளது என்பதை ஆராய்ந்து பார்த்துச் செயற்பட வேண்டும்

காத்திரமாகச் செய்ய வேண்டிய எத்தனையோ பணிகள் இன்னும் கிடப்பில் கிடக்கின்ற போது, வெறுமனே மக்களைக் குதூகலிக்கச் செய்யும் அரசியலை மட்டும் மலையக அரசியல்வாதிகள் செய்து கொண்டிருக்க முடியாது.

நடிகர்களையோ, கலைஞர்களையோ கொச்சைப்படுத்தவில்லை. இந்தியாவில் இருந்து ஒரு முக்கிய அரசியல்வாதியை, சமூக செயற்பாட்டாளரை, ஒடுக்கப்பட்ட இனத்திற்காக அங்குப் போராடிய ஒருவர் பங்கேற்றிருந்தால் இந்த விமர்சனங்களைத் தவிர்த்திருக்கலாம்.

அப்படிச் செய்திருந்தால், நடிகைகளைக் காண வருவது போல அப்போது மக்கள் கூட்டம் சேராது. செல்பி எடுக்க யாரும் வரமாட்டார்கள் என்பது உண்மைதான், ஆனால் அதனையெல்லாம் தாண்டி அதில் ஒரு காத்திரமான தன்மை இருந்திருக்கும்.

ஆனால், தமிழர் பண்பாட்டோடு கூடிய ஒரு நிகழ்வுக்கு, மலையகத் தமிழர்களின் வரலாற்றைக்கூட சரியாக, ஒரு சில நடிகர்களைப் போல மலையக, தமிழ் மக்களுக்காகக் குரல்கொடுத்திராத ஆட்களை அழைத்து வந்து மேடையேற்றியதில் கண்டபயன், விமர்சனங்கள் அன்றி எதுவும் இருப்பதாகத் தெரியவில்லை.

ஆகவே, ஸ்ரீதரன் எம்.பி. தலைவரானால், தமிழரசுக் கட்சி தமிழ் மக்களின் பிரச்சினைகள் எல்லாவற்றையும் தீர்த்து வைத்து விடும் என்று கூறுவதற்கில்லை. செய்வதெல்லாம் சரி என்றும் ஆகிவிடாது. அவர்களும் கற்றுக் கொள்ள வேண்டிய, புடம்போட வேண்டிய விடயங்களும் செல்ல வேண்டிய பாதைகளும் உள்ளன.

அதேபோன்று பொதுவாக முஸ்லிம் கட்சிகளும், மலையகக் கட்சிகளும் மக்கள் சார்பு அரசியலில் படம் காட்டுவதை விடுத்து, உருப்படியாக செயற்பாடுவது குறித்து நிறையப் பாடங்களை கற்றுக் கொள்ள வேண்டியுள்ளது.

## கடிதங்கள்

### வழியை மாற்றியதால் அவதிப்படும் பயணிகள்

சாமிமலை -கண்டிக்கு இடையில் 60 வருடங்களுக்கு மேலாக சேவையில் ஈடுபட்டுவந்த இலங்கை போக்குவரத்து சபையின் ஹட்டன் டிபோவுக்கு சொந்தமான பஸ், வழியை மாற்றியதால், நோயாளிகள் உட்பட பயணிகள் அவதிப்படுகின்றனர்.

மஸ்கெலியா-சாமிமலை நகரில் இருந்து கண்டிக்கு சேவையில் ஈடுபட்டுவந்த பஸ்ஸே வேறு வழியில் இயக்கப்படுகின்றது.

சாமிமலை நகரில் இருந்து அதிகாலை 4.30 மணிக்குப் பயணத்தை ஆரம்பித்து, மஸ்கெலியா, நோர்டன்பிரிட்ஜ், கினிகத்தேன, நாவலப்பிட்டி ஊடாக கண்டிக்கு நீண்ட தூர சேவையாக இந்த பஸ் சேவையில் ஈடுபட்டது.

நாவலப்பிட்டி, பேராதனை மற்றும் கண்டி பிரதான வைத்தியசாலைகளுக்கு இந்த பேருந்தின் மூலம் தினமும் அதிகளவான நோயாளர்கள் பயணிக்கின்றனர்.

சாமிமலை- கண்டி பேருந்து இல்லாத காரணத்தினால் கொழும்பு பேருந்தைப் பிடிப்பதற்காக ஓட்டோக்களுக்கு 2,000 ரூபாவை மேலதிகமாக செலவழிக்க வேண்டியுள்ளது என பயணிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

அதிக விலையைத் தாங்க முடியாததாலும் நாவலப்பிட்டி, கண்டி, பேராதனை பொது வைத்தியசாலைகளுக்குச் செல்வதை நிறுத்திவிட்டு நோயாளர்களுடன் வீடு திரும்புவதாக நோயாளர்களின் உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

கண்டி பேருந்து இயக்கப்படாமையால் அப்பகுதியில் உள்ள அரச மற்றும் தனியார் நிறுவனங்களில் பணிபுரியும் பெருமளவான மக்கள் மற்றும் பல்வேறு தேவைகளுக்காக வெகுதூரம் செல்லும் பயணிகளும் தற்போது மிகவும் சிரமத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

–காமினி பண்டார




# “முத்தம் மட்டுமே அட்ஜெஸ்ட்மெண்ட்”

திரை உலகில் வாய்ப்புகள் கேட்டு வரும்போது உள்ள நடிகைகள் ‘அட்ஜெஸ்ட்மெண்ட்’ செய்ய வேண்டும் என்று இயக்குநர்கள், தயாரிப்பாளர்கள், நடிகர்கள் வலியுறுத்துவார்கள் என்று குற்றச்சாட்டு பல ஆண்டுகளாக இருந்து வருகிறது.

இந்த நிலையில், சில தமிழ்ப் படங்களில் நடித்த நடிகை பாப்ரி கோஷ் என்பவர் அண்மையில் அளித்த பேட்டியில், “அட்ஜெஸ்ட்மெண்ட் செய்தால் மட்டுமே பட வாய்ப்பு என்று என்னிடம் யாராவது கேட்டால், உடனே நான் முடியாது என்று சொல்ல மாட்டேன், நேராக அந்த நபரின் வீட்டிற்குச் சென்று அவருடைய மனைவி மற்றும் குடும்பத்தினர் மட்டும் ஒரே ஒரு முத்தம் கொடுப்பேன். அதன் பிறகு அந்த நபரின் வீட்டில் உள்ளவர்கள் அவரை கவனித்துக் கொள்வார்கள்.

பொதுவாக இதுபோன்ற பிரச்சினையை சந்திப்பவர்கள் வெளியே சொல்ல பயந்து கொண்டு இருப்பதால்தான் அட்ஜெஸ்ட்மெண்ட் கேட்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இது போன்ற பிரச்சனைகளில் துணிச்சலான முடிவு எடுக்க வேண்டும்” என்றும் நடிகை பாப்ரி கோஷ் தெரிவித்துள்ளார்.



# 6ஆவது முறையாக சேரும் ஹிட் ஜோடி

‘ஜெயிலர்’ படத்தை அடுத்து தற்போது ஞானவேல் இயக்கும் ‘வேட்டையன்’ படத்தில் நடித்து வருகிறார் ரஜினிகாந்த். இந்த படத்தை முடித்ததும் மீண்டும் நெல்சன் இயக்கும் ‘ஜெயிலர்- 2’ படத்தில் நடிக்க இருப்பதாக தகவல் வெளியாகியிருக்கிறது.

‘ஜெயிலர்’ படத்தில் சிலை கடத்தல்கார்களிடம் இருந்து தனது மகனை மீட்கும் ரஜினி, பின்னர் மகனையே கொலை செய்வதோடு கதை முடிந்திருக்கும்.

இந்த நிலையில், ‘ஜெயிலர்’ படத்தின் இரண்டாம் பாகத்தில் சிலை கடத்தல் காரர்களுடன் ரஜினி மோதும் சம்பவத்தை அடிப்படையாகக்கொண்டு கதை உருவாகி இருப்பதாக கூறப்படுகிறது.

மேலும், இந்த ‘ஜெயிலர்-2’ படத்தில் ரஜினிக்கு ஜோடியாக நயன்தாரா நடிக்க இருப்பதாக ஒரு தகவல் வெளியாகியிருக்கிறது.

ஏற்கெனவே சந்திரமுகி, குசேலன், சிவாஜி, தர்பார், அண்ணாத்த என ஐந்து முறை ரஜினியுடன் நடித்துள்ள நயன்தாரா, தற்போது ஆறாவது முறையாக மீண்டும் ரஜினியுடன் இணைய உள்ளதாக கூறப்படுகின்றது.



# மைக்கல் ஜாக்சன் வாழ்க்கை வரலாறு



உலகம் முழுவதும் தனது அபார பாடல் திறமை மற்றும் நடனத்தால் மக்களை கவர்ந்த மைக்கல் ஜாக்சன் (Michael Jackson) வாழ்க்கை வரலாறு திரைப்படம் உருவாக இருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது.


அமெரிக்காவில் பிறந்த மைக்கல் ஜாக்சன், 6 வயதாக இருக்கும்போது பாடல்களை பாட தொடங்கியதை அடுத்து அவரது உருவத்தை பார்த்து பலர் கேலி செய்தனர். ஆனால், அவர் அதையெல்லாம் பொருட்படுத்தாமல் தனது பாடல் மற்றும் நடனத்தால் பலரை ஈர்க்கத் தொடங்கினார்.

இந்த நிலையில், ஒரு கட்டத்தில் உலகமே போற்றும் வகையில் பிரபல பாடகர் மற்றும் நடன கலைஞராக மாறினார்.

1980 களில் அமெரிக்கா மட்டுமின்றி, உலகில் உள்ள பல நாடுகளில் ரசிகர்கள் அவருடைய பாடல், நடனத்திற்கு அடிமையாக இருந்தனர். கடந்த 2009 ஆம் ஆண்டு திடீரென அவர் மாரடைப்பால் காலமானார்.

சுமார் 15 ஆண்டுகள் கழித்து அவரது வாழ்க்கை வரலாறு திரைப்படம் உருவாகி வருகிறது.

மைக்கல் ஜாக்சன் கேரக்டரில் அவர் உறவினர் ஜாபர் ஜாக்சன் நடிக்க இருப்பதாக கூறப்படுகிறது. இந்த படம் அடுத்த ஆண்டு வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



# “கேப்டன் மில்லர்” கதை திருட்டு?

இயக்குநர் அருண் மாதேஸ்வரன் இயக்கத்தில் தனுஷ் நடித்துள்ள ‘கேப்டன் மில்லர்’ பொங்கல் பண்டிகையை முன்னிட்டு கடந்த 12ஆம் திகதி வெளியானது.

இந்த படத்தின் கதை நடிகரும் எழுத்தாளருமான வேலராமமூர்த்தி எழுதிய ‘பட்டத்துயானை’ நாவலின் கதையை திருடி எடுக்கப்பட்டுள்ளதாக குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டுள்ளது. குற்ற பரம்பரை, குருதி ஆட்டம், அரியநாச்சி உள்ளிட்ட பல நாவல்களுக்காக வேல ராமமூர்த்தி, புகழ்பெற்றவர். இவர் எழுதிய ‘பட்டத்து யானை’ என்ற நாவல் புத்தகமாக வெளியாகியிருந்தது.

இந்த நிலையில், கேப்டன் மில்லர் திரைப்படம் தன்னுடைய நாவலில் இருந்து கதையை திருடி எடுக்கப்பட்டதாக வேல ராமமூர்த்தி குற்றம் சாட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் கூறியதாவது, ‘கேப்டன் மில்லர் படத்தின் கதை எனது ‘பட்டத்துயானை’ நாவலை பின்னணியாக வைத்து உருவாகியுள்ளதாக கேள்விப்பட்டேன். என்னிடம் ஒருவார்த்தை கேட்டிருக்கலாம் அல்லது அனுமதி வாங்கி இருக்கலாம். கேப்டன் மில்லர் மட்டுமல்ல இன்னும் பல படங்களிலும் எனது கதைகள், சீன்கள் திருடப்பட்டுள்ளன” என்று கூறியுள்ளார்.

# மாதவனுடன் இணையும் ஜோதிகா

தமிழில் முன்னணி கதாநாயகியாக ஜொலித்த ஜோதிகா திருமணத்துக்கு பிறகும் கதைக்கு முக்கியத்துவம் வாய்ந்த படங்களில் நடித்து வருகிறார்.


அண்மையில் மலையாளத்தில் மம்முட்டியுடன் ஜோதிகா நடித்த ‘காதல் தி கோர்’ படம் ரசிகர்களின் வரவேற்பை பெற்றது.

தற்போது மும்பையில் தங்கியுள்ள ஜோதிகா, பொலிவூட் படங்களிலும் கவனம் செலுத்தி வருகிறார். அந்தவகையில், அஜய் தேவ்கன் நடிப்பில் உருவாகி இருக்கும் ‘சைத்தான்’ படத்தில் ஜோதிகா நடிக்கிறார்.

சுமார் 26 ஆண்டுகளுக்கு பின்னர் மீண்டும் இந்தி படத்தில் ஜோதிகா நடிக்கிறார். ‘சைத்தான்’ படத்தில் நடிகர் மாதவனும் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கிறார்.

ஜோதிகா–மாதவன் நடிப்பில் வெளியான ‘டும்... டும்... டும்...’, ‘பிரியமான தோழி’ ஆகிய படங்கள் வெற்றி படங்களாக அமைந்தன.

அந்தவகையில் மாதவனும், ஜோதிகாவும் ஹிந்தி படத்தில் இணைந்து நடிப்பது ரசிகர்கள் இடையே எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.



## நயினை நாக பூசணி அம்மனுக்கு

# புதன்கிழமை கும்பாபிஷேகம்



வரலாற்று சிறப்பு மிக்க நயினாதீவு நாக பூசணி அம்மன் ஆலய மகா கும்பாபிஷேகம் புதன்கிழமை (24) இடம்பெறவுள்ளது. அதனை முன்னிட்டு, கோபுரங்கள், தூபிகளுக்கு கலசம் வைக்கும் நிகழ்வுகள் ஞாயிற்றுக்கிழமை (21) இடம்பெற்றன. இதனைத் தொடர்ந்து, திங்கட்கிழமை (22) காலை 07 மணி முதல், செவ்வாய்க்கிழமை (23) மாலை 05 மணி வரை அடியவர்கள் எண்ணெய் காப்பு சாத்தும் நிகழ்வுகள் இடம்பெறும். இதனைத் தொடர்ந்து, புதன்கிழமை (24) காலை 09.38 மணி முதல் 11.20 மணி வரையிலான சுப நேரத்தில் மகா கும்பாபிஷேகம் நடைபெறும்.

– எம்.றொசாந்த்





















# பரிசளிப்பு விழா...

சாய்ந்தமருது, ஏ.ஆர்.எம். முன்பள்ளி பாலர் பாடசாலையின் வருட இறுதி பரிசளிப்பு விழாவும், ஆசிரியர்களை கௌரவித்து விருது வழங்கி வைக்கும் நிகழ்வும் சாய்ந்தமருது லீ மெரிடியன் வரவேற்பு மண்டபத்தில் முன்பள்ளி பாலர் பாடசாலையின் அதிபர் தலைமையில் சனிக்கிழமை (20) இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கல்முனை மாநகர முன்னாள் முதல்வரும் மெற்றோ பொலிட்டன் கல்லூரியின் தவிசாளரும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸின் உயர்பீட உறுப்பினருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் கலந்து கொண்டு சிறப்பித்தார்.

மேலும், ஏ.ஆர்.எம். முன்பள்ளி பாலர் பாடசாலையின் ஆசிரியர் ஆசிரியர்களை பாராட்டி நினைவுச் சின்னம் மற்றும் பரிசுகளையும் வழங்கி வைத்தார்.

























வொஷிங்டன்

# ஐவரை கர்ப்பமாக்கி ஐவருக்கும் வளைகாப்பு

நாமிருவர் நமக்கு இருவர் என்ற நிலைமை மாறி, நாமிருவர் நமக்கு ஒருவர் என்றே இன்னுமிருக்கிறது. நாடுகளின் நிலைமை இவ்வாறே நீடிக்குமாயின் நமக்கேன் ஒருவர், என்ற சிந்தனையும் வளரக்கூடிய வாய்ப்பு இருக்கின்றது. இப்படி இருக்கையில், ஐந்து பெண்களை கர்ப்பமாக்கி ஐவருக்கும் ஒரே நேரத்தில் வளைகாப்பு நடத்திய சம்பவம் வைரலாகியுள்ளது.

அமெரிக்காவைச் சேர்ந்த இசைக்கலைஞரான ஸெடி வயது வித்தியாசம் கொண்ட 5 பெண்களைக் கர்ப்பமாக்கியுள்ளார். அந்த 5 பேருக்கும் ஒரே நேரத்தில் வளைகாப்பு நடத்தப்பட்ட சுவாரசிய சம்பவம் நடந்துள்ளது. இதுகுறித்த புகைப்படங்கள் சமூக



வலைத்தளங்களில் வைரலாகி வருகின்றது.

5 பேருடன் பல நேரங்களில் தொடர்பு வைத்திருந்தபோதிலும், அனைவரும் சில நாட்கள் வித்தியாசத்தில் கர்ப்பம் அடைந்ததாக ஸெடி தெரிவித்துள்ளார். அவ்விளைஞனுக்கு வயது 22 தானாம்.

இந்த சம்பவம் ஸெடியால் கர்ப்பமாக்கப்பட்ட 29 வயதாகும் ஆஷ்லே என்ற பெண், சமூக வலைத்தளங்களில் புகைப்படங்களை வெளியிட்டதைத் தொடர்ந்து உலகுக்குத் தெரியவந்துள்ளது.

இந்த பதிவை 1 கோடிக்கும் அதிகமானோர் பார்த்து அதனைப் பகிர்ந்துள்ளனர். எல்லாம் நல்லபடியாக முடிந்தால் விரைவில் குடும்பத்தினரின் எண்ணிக்கை 11 ஆகும் என்று ஆஷ்லே கூறியுள்ளார்.

இதுகுறித்து கருத்து பகிர்ந்துள்ள நெட்டிசன்கள் உங்கள் 5 பேருக்கு இடையே சண்டை வராதா என்று கேட்டுள்ளனர்.


இதற்குப் பதிலளித்துள்ள ஆஷ்லே, நாங்கள் ஒரு குடும்பமாக எங்களது குழந்தைகளை வரவேற்கத் தயாராக உள்ளோம். அத்துடன், நாங்கள் ஒற்றுமையாக இருந்தால்தான் எங்கள் குழந்தைகளுக்கு நல்லது என்றும் கூறியுள்ளார்.

# உலகின் பெரிய பணக்கார அரசியல்வாதி புட்டின்

ரஷ்ய ஜனாதிபதி விளாதிமிர் புட்டின் அதிகாரப்பூர்வ ஆண்டு வருமானம் 1.4 இலட்சம் டொலராகும். தான் வசிப்பது 800 சதுர அடி வீடு என்றும் தன்னிடம் 3 கார்கள் மட்டுமே இருப்பதாகவும் அவர் முன்பு தெரிவித்திருக்கிறார்.

ஆனால், புட்டினின் உண்மையான சொத்து மதிப்பு குறித்து பல்வேறு தகவல்கள் உலாவுகின்றன.

விளாதிமிர் புட்டின் 2012ஆம் ஆண்டு முதல் ரஷ்ய ஜனாதிபதியாகப் பதவி வகித்து வருகிறார். அவரது மொத்த சொத்து மதிப்பு 200 பில்லியன்



டொலர் (ரூ.16 இலட்சம் கோடி) என்றும் கருங்கடலை ஒட்டி அவருக்கு 1.9 இலட்சம் சதுர அடியில் மிகப் பெரிய மாளிகை உள்ளது என்றும் கூறப்படுகிறது.

இதன் மதிப்பு ரூ.11,500 கோடி. இந்த மாளிகையில் உள்ள உணவு மேஜையின் மதிப்பு மட்டும் ரூ.4.15 கோடியாகும். இந்த மாளிகையை பராமரிப்பதற்கு மட்டும் மாதம் 2 மில்லியன் டொலர் (ரூ.16 கோடி) செலவிடப்படுகிறது.

இந்த மாளிகை தவிர்த்து, அவர் வசம் 19 பிரம்மாண்ட வீடுகள், 700 கார்கள், 58 விமானங்கள் மற்றும் ஹெலிகொப்டர்கள், 6 இலட்சம் டொலர் (ரூ.5 கோடி) மதிப்புள்ள கைக்கடிகாரங்கள் உள்ளன என்றும் கூறப்படுகிறது.

இவற்றில், 'தி ப்ளெயிங் கெர்மிலின்' என்ற விமானத்தின் மதிப்பு மட்டும் 716 மில்லியன் டொலர் (ரூ.6,000 கோடி) ஆகும். அதில் தங்கத்திலான கழிவறை அமைக்கப்பட்டுள்ளது என்று தகவல்கள் கூறுகின்றன.

## வீடு முழுவதும் தங்கம்; சாப்பிடுவதற்கு பயம்



ஐதராபாத் நிஜாம் உஸ்மான் அலி கான்

இந்தியா சுதந்திரம் அடைவதற்கு முன்பு நாட்டின் மிகப்பெரும் பணக்காரராக இருந்தவர் ஐதராபாத் நிஜாம் நவாப் மிர் உஸ்மான் அலிகான். 77 ஆண்டுகளுக்கு முன்பே அவரது சொத்து மதிப்பு ரூ. 17.5 லட்சம் கோடி அளவுக்கு இருந்துள்ளது.

புகழ்பெற்ற 'ஜேக்கப்' வைரம் நிஜாம் அரண்மனையில் உள்ள அவரது மேசையின் டிராயரில் வைக்கப்பட்டிருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

இந்த விலைமதிப்பற்ற வைரம் எலுமிச்சை அளவு மற்றும் 280 கரட் இருந்தது. ஆனால் நிஜாம் இந்த வைரத்தை பேப்பர் வெயிட்டாக பயன்படுத்தினார் என்றால் அவரது மற்ற சொத்து விபரங்களைக் கற்பனை செய்து பார்த்துக் கொள்ளலாம்.

நிஜாம் தோட்டத்தில் பல்வேறு இடங்களில் தங்கச் செங்கற்கள் ஏற்றப்பட்ட லொறிகள் புதர்களுக்கு நடுவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படுகின்றது.

மகா கோடீஸ்வரராக நிஜாம் உஸ்மான் அலிகான் இருந்தாலும், அதே அளவுக்குக் கஞ்சத்தனத்திற்குப் பெயர் போனவர். அவரிடம் தங்கத் தட்டுகள் நூற்றுக் கணக்கில் இருந்தாலும், டின் பாத்திரங்களில் உணவைச் சாப்பிடுவார். அவர் அடிக்கடி அதே அழுக்கு கொட்டன் பிஜாமாக்களை அணிந்திருந்ததுடன், காலில் மிகவும் மோசமான தரமான காலணிகளைப் பயன்படுத்தியே வந்துள்ளார்.

நிஜாமின் கஞ்சத்தனத்தின் நிலை என்னவென்றால், அவரைச் சந்திக்க வந்தவர், அணைந்த சிகரெட்டை ஆஷ்ட்ரேயில் விட்டுச் சென்றாலும், நிஜாம் பின்னர் அதைப் பற்றவைத்துக் குடிக்கத் தொடங்குவாராம்.

தன்னை யாராவது விஷம் வைத்துக்கொன்று தன் செல்வத்தைக் கைப்பற்றி விடுவார்களோ என்ற பயம் நிஜாமிடம் எப்போதும் காணப்பட்டது. இதனால் அவர் எங்கு சென்றாலும், அவர் சாப்பிடவுள்ள உணவை முதலில் சாப்பிட்டுப் பார்ப்பதற்கு ஒரு குழுவை அழைத்துச் செல்வாராம்.

புதுடெல்லி

## உடல் முழுவதும் பச்சை குத்தும் தீவிர பக்தர்கள்

ராம்நாமி சமாஜ் 19ஆம் நூற்றாண்டு காலத்தில் மத்திய மற்றும் வடக்கு சத்தீஸ்கரில் உருவான அமைப்பு. இந்தியாவில் நிலவும் சாதி அமைப்பு எதிர்ப்பை முக்கிய நோக்கமாகக் கொண்டு இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது. இந்த இயக்கத்தைச் சேர்ந்தவர்கள்தான் ராம்நாமிகள் என்று அழைக்கப்படுகின்றனர்.

இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் தங்கள் உடல்களிலும், முகங்களிலும், மொட்டைத் தலையிலும் ராமரின் பெயரை பச்சைக் குத்திக் கொள்கின்றனர்.

ராம் லல்லா சிலை கும்பாபிஷேக விழா குறித்து



முன்னோர்கள் 150 ஆண்டுகளுக்கு முன்பே அறிவித்துள்ளதை ராம்நாமிகள் நினைவு கூர்கின்றனர்.

காவி உடை அல்லது மொட்டையடித்த தலையுடன் வலம் வரும் ராம்நாமிகள் அனைத்துவடிவத்திலும் ராமரை வணங்குவதை வலியுறுத்துகின்றனர். இருப்பினும், மரபுவழி இந்து மத்திலிருந்து விலகி ஒரு உருவமற்ற தெய்வீக அமைப்பையே அவர்கள் நம்புகிறார்கள்.

கவுகாத்தி

## ராகுல் காந்திக்கு வழிபட அனுமதி மறுப்பு

காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி கடந்த 14ஆம் திகதிதி மணிப்பூரில் இந்திய ஒற்றுமை நியாய யாத்திரையை தொடங்கினார். யாத்திரை தற்போது அசாம் மாநிலத்தில் நடைபெற்று வருகிறது.

இந்நிலையில், அசாம் மாநிலம் நாகன் மாவட்டத்தின் ஹைபரங்கான் பகுதியில் திங்கட்கிழமை (22) யாத்திரை தொடங்கியது. யாத்திரை தொடங்குவதற்கு முன் ஹைபரங்கானின் பர்டுரா பகுதியில் உள்ள ஸ்ரீஸ்ரீ சங்கர்தேவ் மத வழிபாட்டு தலத்தில் ராகுல் காந்தி வழிபாடு நடத்த சென்றார்.

ஆனால், ராகுல் காந்தி கோவிலில் வழிபாடு நடத்த அதிகாரிகள் அனுமதி மறுத்தனர். வழிபாடு நடத்த அனுமதி மறுக்கப்பட்டதால் கோவிலுக்கு வெளியே உள்ள வீதியில் ராகுல் காந்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகிறார்.



### ஜேர்மனிய பெண்டெலிஸ்கா தொடர்:

# தோற்ற நடப்பு சம்பியன்கள் மியூனிச்

ஜேர்மனிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பெண்டெலிஸ்கா (German Bundesliga) தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற வேர்டர் பிறீமனுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் நடப்புச் சம்பியன்களான பயேர்ண் மியூனிச் தோற்றது.



வேர்டர் சார்பாகப் பெறப்பட்ட கோலை மிற்செல் வெய்ஸர் பெற்றிருந்தார்.

பெண்டெலிஸ்கா புள்ளிகள் பட்டியலில் 48 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் பயேர் லெவர்குசன் உள்ளது. 41 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும் மியூனிச்சும், 34 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் வி.எஃப்.பி ஸ்டட்கார்ட்டும், 33 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் ஆர்.பி. லெய்ப்ஸிக்கும் உள்ளன. பொரூசியா டொட்டமுண்டும் 33 புள்ளிகளுடன் உள்ளபோதும் கோலெண்ணிக்கை அடிப்படையில் ஐந்தாமிடத்திலுள்ளது.

இதில் மியூனிச் ஒரு போட்டி குறைவாக விளையாடியுள்ளது.

## அவுஸ்திரேலிய குழாமில் புதுமுகங்கள்



மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடருக்கான அவுஸ்திரேலியக் குழாமில் புதுமுக துடுப்பாட்டவீரர் ஜேக் பிறேஸர்-மக்குர்க், வேகப்பந்து வீச்சாளர் ஸ்கெவியர் பார்ட்லெட் ஆகியோர் இடம்பெற்றுள்ளனர்.

ஓய்வளிக்கப்பட்ட கிளென் மக்ஸ்வெல், காயமடைந்த ஜஹை றிச்சர்ட்ஸனையே இவர்கள் பிரதியிட்டுள்ளனர்.

## இங்கிலாந்து சுற்றுப் பயணத்திலிருந்து விலகிய ப்றூக்



இந்தியாவுக்கான இங்கிலாந்தின் டெஸ்ட் குழாமுக்கான சுற்றுப் பயணத்திலிருந்து தனிப்பட்ட காரணங்களுக்காக ஹரி ப்றூக் விலகியுள்ளார்.

ஐந்து போட்டிகளைக் கொண்ட இத்தொடரின் ஆரம்பத்தையே ப்றூக் தவறவிடவுள்ள நிலையில், அவரது பிரதியீடாக டான் லோரன்ஸை இங்கிலாந்து அழைத்துள்ளது.

ப்றூக்குக்கு பதிலாக அணியில் விக்கெட் காப்பாளர் பென் போக்ஸ் இடம்பெறுவார் எனத் தெரிகிறது.

## அத்லெட்டிகோ மட்ரிட் செல்லும் கீன்?



ஸ்பானிய லா லிகா கால்பந்தாட்டக் கழகமான அத்லெட்டிகோ மட்ரிட்டில் இணைவதை இத்தாலிய சீரி ஏ கழகமான ஜுவென்டஸின் முன்களவீரர் மொய்ஸே கீன் நெருங்கியுள்ளதாகக் கூறப்படுகிறது.

ஜுவென்டஸில் 18 வயதான கெனான் யில்டிஸ்ஸின் பெறுபேறுகள் காரணமாக 23 வயதான கீனின் விளையாடும் நேரம் குறைவடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாப்போலிக்குச் செல்லும் மொரின்யோ?

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான நாப்போலியின் தலைவர் ஒளரெலியோ டி லோரன்டிஸுடன் பேச்சுக்களை இன்னொரு சீரி ஏ கழகமான றோமாவின் முன்னாள் பயிற்றுவிப்பாளர் ஜொஸே மொரின்யோ நடத்தவுள்ளார்.

றோமாவிலிருந்து பதவி நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இத்தாலியில் தங்கியிருக்கவே மொரின்யோ விரும்புகின்றமை குறிப்பிடத்தக்கது.




### டயலொக் தேசிய வலைப்பந்துத் தொடர்:

# சம்பியனான எச்.என்.பி

Dialog
NATIONAL NETBALL CHAMPIONSHIP 2023






டயலொக் தேசிய வலைப்பந்தாட்டத் தொடரில் எச்.என்.பி சம்பியனானது.

கடந்த வாரயிறுதியில் நடைபெற்ற 26 அணிகள் பங்கேற்ற இத்தொடரின் இறுதிப் போட்டியில் 40–29 என்ற புள்ளிகள் கணக்கில் விமானப்படை அணியை வென்றே எச்.என்.பி சம்பியனானது.

தமது அரையிறுதிப் போட்டியில் இலங்கை துறைமுகங்கள் அதிகாரசபை அணியை 48–28 என்ற புள்ளிகள் கணக்கில் எச்.என்.பியும், கடற்படை அணியை 42–22 என்ற புள்ளிகள் கணக்கில் வென்று விமானப்படையும் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெற்றன.

தொடரின் இராணியாக விமானப்படையின் ரஷ்மி திவ்யாஞ்சலியும், சிறந்த எய்தல் வீராங்கனையாக எச்.என்.பியின் தர்ஷிகா அபேவிக்கிரமவும், சிறந்த தடுப்பு வீராங்கனையாக விமானப்படையின் சுரேகா பெரேராவும் தெரிவாகினர். சிறந்த மத்தியகளவீராங்கனையாக விமானப்படையின் ருக்ஷலா ஹப்புராச்சியும் தெரிவாகினர்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் செவ்வாய்க்கிழமை, 23 ஜனவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.